## வந்தாச்சு பாலிதீன் கலன்
## 10.12.2012



**சாண எரிவாயு உற்பத்தியில் அடுத்த மைல்கல்...**

வருடத்திற்கு ஆறு சிலிண்டர் தந்தால் என்ன அறுபத்திநான்கு சிலிண்டர் தந்தால் என்ன.. இதை ப்றறியெல்லாம் எங்களுக்குக் கவலையேயில்லை. ஏன்னென்றால்.. நாங்கள் தோட்டத்திலேயே கேஸ் உற்பத்தித் தொழிற்சாலை வைத்திருக்கிறோம் என்று தெம்பாகச் சொல்கிறார்கள், கோயம்புத்தூர் மாவட்டம், சுல்தான் போட்டை அடுத்துள்ள, சாளைப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த தங்கவேல் - கவிதா தம்பதி!

இவர்கள் அமைத்திருப்பது.. சாண எரிவாயுக் கலன். இது வழக்கம் போல்... இரும்புக்கலன், சிமெண்ட் தொட்டி என்று இல்லாமல், எளிதாகக் கையாளக் கூடிய வகையில் 'பாலிதீன் ஷீட்டில்' தயாரான புதுவகைக் கலனாக இருப்பது கூடுதல் சிறப்பு!

படித்து முடித்ததும் விவசாயத்திற்கு வந்துவிட்டேன். அதற்கு தோதாக தோட்டத்திலேயே வீட்டைக் கட்டி குடிவந்துவிட்டேன். ஆரம்பத்தில் விறகு அடுப்புதான். அதன்பிறகு, புகையில்லாமல் சமைப்பதற்காக கேஸ் சிலிண்டருக்கு மாறினோம். ஆனால், கிராமத்தில் சிலிண்டர் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. மாதத்திற்கு ஒரு முறைதான் சிலிண்டர் வண்டி வரும். அன்றைக்கு காலி சிலிண்டரோட மெயின் ரோட்டில் காத்துக் கிடக்க வேண்டும். அதெல்லாம் நமக்க சரிப்பட்டு வராவில்லை. அதனால்தான், மாட்டுச் சாணத்திலிருந்து கேஸ் உற்பத்தி செய்லாம் என்று முடிவுக்கு வந்தேன்.



கேஸ் அடுப்புடன் கவிதா...

இதைப் பற்றி விசாரித்த பொழுது, சாண எரிவாயுக் கலன், இரும்பு டிரம்லதான் அமைக்கணும். பெரியக் கிடங்க வெட்டி, சிமெண்ட் பூசி பதிக்க வேண்டும். அதற்கு செலவு அதிகமாகும். துருப்பிடித்து போனால் பிரச்னை வரும் என்று ஆளாளுக்கு ஒவ்வொரு கருத்து சொன்னாங்க. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில்தான் 'பாலிதீன் பயோ கேஸ் ஹோல்டர் என்று ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டு, அதை வாங்கிப் போட்டுவிட்டோம். இதைப் போட்டு இரண்டு வருடம் முடிந்தது. இதில் சாணம் மட்டுமில்லாமல், காய்கறிக்கழிவு, தீவனக்கழிவு எல்லாவற்றையும் பயன்படுத்த முடியும். ஒரு கிலோ சாணத்திற்கு ஒரு கிலோ தண்ணீர் என்ற கணக்கில் கரைத்து ஊற்றவேண்டும். மற்றக் கழிவுகளாக இருந்தால்... நல்லா நசுக்கி, தண்ணீரில் கரைத்து ஊற்ற வேண்டும். தினமும் 20 -25 கிலோ அளவிற்கு சாணத்தை ஊற்றுகிறோம். நாள் முழுக்க தட்டுப்பாடு இல்லாமல் கேஸ் கிடைக்கிறது. கேஸ் உற்பத்தி முடிந்து வெளியாகும் கழிவை (ஸ்லர்ரி), தென்னை மரங்களுக்கு உரமாக்கிவிடுகிறோம். இது, பல கொள்ளளவுகளில் கிடைக்கிறது. நமக்குத் தேவையான அளவில் வாங்கிக்கொள்ளலாம். நாங்கள், 1 கன மீட்டர் கொள்ளவு உள்ள ஹோல்டர் போட்டிருக்கிறோம். 4 அடி நீள, அகலத்தில், 3 அடி ஆழத்தில் குழி எடுத்து, அதற்குள் இந்த ஹோல்டரை வைத்துவிடலாம். சிமெண்ட் பூச்செல்லாம் தேவையில்லை. வாயு அதிகமாக உற்பத்தியாகும் போது, ஹோல்டர் மேலே எழும்பி வராமல் இருப்பதற்காக சுமார் 10 கிலோ எடையுள்ள ஒரு மூட்டையை ஹோல்டர் மேல் வைக்க வேண்டும்.

நான்கு மணி நேரம் தொடர்ந்து எரியும் அளவிற்கான கேஸ், இந்த ஒரு கனமீட்டர் ஹோல்டரிலிருந்து கிடைக்கும். இது பெரிய பலூன் மாதிரி 'திக்'கான பாலிதீனில் தயார் செய்திருப்பதால், வெயில், மழையால் பாதிப்பு இல்லாமல் பத்து வருடம் வரைக்கும் உழைக்கும் என்று சொல்றாங்க. முள், ஆணி பட்டாலும் ஓட்டையாகாது. அப்படியும் ஓட்டை விழுந்தால்...

பஞ்சர் பார்ப்பதற்கும் வசதி இருக்கு. சாணம் கரைத்து ஊற்றுவதற்காக ஒரு பெரியத் துறை, கேஸ் வருவதற்கு சினன்த் துறை இது மூன்ற இதில் இருக்கு.

முதலில் அமைக்கும்போது... 300 கிலோ சாணத்தை, 300 கிலோ தண்ணிரில் கரைத்து ஊற்ற வேண்டும். காய்ந்த சாணமாக இருந்தால்... கேஸ் வெளியில் வர ஒரு மாதம் ஆகும். புது சாணமாக இருந்தால்... 15 நாளில் வந்துவிடும். கேஸ் வர ஆரம்பித்த பிறகு, தினமும் 20 கிலோ ... இல்லை என்றால்... 25 கிலோ சாணத்தை தண்ணிரில் கலந்து ஊற்ற வேண்டும். இதற்கு, வீட்டில் இரண்டு மாடு இருந்தாலே போதும். சாண எரிவாயு தண்ணீர் அளவு சரியாக இருக்க வேண்டும். கூடவோ, குறைச்சலாகவோ இருந்தால் ... வாயு உற்பத்தி அதற்கு தகுந்தபடிதான் இருக்கும் என்று சொன்னார்.

இப்போதெல்லாம், சிலிண்டர் விலை ஏறிப்போச்சு என்று யாராவது என்னிடம் புலம்பினால், கையில் வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய்க்கு ஏன் அலையுறீங்க என்றுதான் திருப்பிக் கேட்கிறோம். இதற்கு 10 ஆயிரம் ரூபாய்தான் மொத்தச் செலவானது. நாங்க இரண்டு வருடத்திலேயே 5 ஆயிரம் ரூபாய் வரைக்கும் கேஸ் செலவில் அதை ஈடுகட்டிவிட்டோம். அதில்லாமல் இதில் விபத்து நடக்கவும் வாய்ப்பில்லை. இதைப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டால், கேஸ் பற்றிய கவலையே இல்லாமல் இருக்கலாம் என்று விடைகொடுத்தார். நான்கு மாடுகள் இருந்தால்.. நாமதான் நெய்வேலி சுற்றுச்சூழலக்கு பங்கம் இல்லாத மின்சாரத்தின் மூலம் சா ாஜ் செய்யப்படும் போட்டரி பைபகினை கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பயன்படுத்தி வருகிறார். 30ஆயிரம் ரூபாய் விலையில் வாங்கிய பின்பு 600 லிட்டர் பெட்ரோலை மிச்சம் செய்துள்ளேன் எனச் சொல்லும் தங்கவேல், மாடுகளை அதிகரித்து, அதன் மூலம் பயோ கேஸையும் அதிகரித்து, என் குடும்பத்திற்கு தேவையான சமையல் எரிவாயுவையும் மின்சார உற்பத்தியையும் செய்து கொள்ளப் போகிறேன். இனி வரும்காலங்களில் கண்டிப்பாக விவசாயிகள் அனைவரும் இதை நோக்கி வந்தே ஆகவேண்டும். அரசாங்கம் கொடுக்கும் மின்சாரம், சிலிண்டர் எதுவும் நமக்குத் தேவையில்லை. நான்கு மாடுகள் இருந்தால், நாமேதான் நெய்வேலி, நாமதான் கூடங்குளம். அதற்கான நேரம் நெருங்கிவிட்டது என்கிறார் அழுத்தமாக.

**நகரத்திலம் பயன்படுத்த முடியும்!**

'பயோ கேஸ் ஹோல்டர்' விற்பனை செய்து வரும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த அர்ஜீன் மோகனிடம் பேசியபோது, கிராமப்புற மக்கள், விவசாயிகள் மட்டுமல்ல.. நகரவாசிகள்கூட இதைப் பயன்படுத்தி சமையல் எரிவாயுவை உற்பத்தி செய்து கொள்ள முடியும். ஒரு வீட்டிற்குத் தேவையான சின்ன அளவில் இருக்கும் கலனை, வீட்டு மொட்டை மாடியிலேயே வைத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். அடிக்கடி வீடு மாறினால்கூட எடுத்துட்டுப் போக முடியும். கிராமத்து வீடுகளில் அமைக்கும்போது சின்னதாக குழி எடுத்து, அதற்குள் வைத்துக் கொண்டால்.. இந்தக் கலன் உருளாமல் இருக்கும். நகரங்களில் அதற்கு வாய்ப்பில்லாததால்... இரும்பு ஸ்டாண்ட் பயன்படுத்திக்கலாம்.

அடுக்குமாடி வீடுகளில் இருப்பவர்கள்.. மொத்தமாக சேர்ந்து பொயி அளவில் அமைத்து, வீணாகும் கழிவுகளைப் பயன்படுத்தியே கேஸ் உற்பத்தி செய்து பகிர்ந்துகொள்ளலாம். காய்கறிக் கழிவுகள், கோழி இறைச்சிக் கழிவுகள், மனிதக் கழிவுகள், பசும்புல், மல்பெரி, பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம்... உள்பட மட்கக்கூடிய எல்லா பொருட்களிலும் இதற்குள் போட்டு, எரிவாயு உற்பத்தி செய்ய முடியும். எலுமிச்சை மாதிரி சிட்ரிக் அமிலம் உள்ள கழிவுகளை மட்டும் பயன்படுத்தக் கூடாது.

கோயம்பேடு, ஒட்டன்சத்திரம்,திருப்பூர் மாதிரியான ஊர்களில் காய்கறி மார்க்கெட் பக்கத்தில் இருப்பவங்களுக்கு .... அதிகளவில் கழிவுகள்

**தொடர்புக்கு**

**கே. தங்கவேல், செல்போன் : 94880 – 42428.**

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.12.12 www.vikatan.com**